**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், B.Sc., B.L.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

**இடைநிலை மனு எண்.04/2025 ல்**
**அசல் வழக்கு எண்.168/2019**

R.சிவசண்முகம்,
த.பெ ரத்தினம்,
அரசு மேல்நிலைப்பள்ளி தெரு,
க.எண்.21, துறையூர் நகர்,
துறையூர் தாலுக்கா,
துறையூர் மாவட்டம். ... மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி

/எதிர் /

ஸ்ரீஇமாலயம் பைனான்ஸ்,
பதிவு பெற்ற கூட்டு நிறுவனம்,
அதன் சார்பாக நிர்வாக பங்குதாரர்
R. மனோகரன். ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு, கடந்த 17.09.2025 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தும், மனுதாரர்/2 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு T.செந்தில்குமார் அவர்களும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V. ராமமூர்த்தி அவர்களும் முன்னிலையாகியும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாத பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

## உத்தரவு

1. மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக 07.04.2021 அன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் வகுமுறை 9 விதி 7–ன் கீழ், மனுதாரர்/2ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, இந்த மனுதாரர் அசல் வழக்கில் மனுதாரர் 2ம் பிரதிவாதி என்றும், அசல் வழக்கில் 07.04.2021 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், கொரானா காலகட்டம் என்பதால் இந்த மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யக் கூற இயலவில்லை என்றும், இந்த மனுதாரர் சம்மன் பெற்ற பிறகு அவரது வழக்கறிஞரை சந்தித்தபோது தனது தரப்பில் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளதாக கூறியதாகவும், 1ம் எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், அதனையே மனுதாரர்/2ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்வதாகவும், மனுதாரர் தரப்பில் நல்ல கட்சி உள்ளதாகவும், எனவே, 07.04.2021 அன்று வழங்கப்பட்ட ஒருதலைபட்ச (Exparte) உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிருரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, அசல் வழக்கானது 2019 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றும், அசல் வழக்கில் வா.சா.1 மற்றும் வா.சா.2 விசாரணை செய்யப்பட்டு, எதிர்தரப்பு வாதத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், இந்த நிலையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் கொரானா காலகட்டம் என்பதால் அவரது வழக்கறிஞரை சந்தித்து எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறுவது உண்மையல்ல என்றும், மனுதாரர்/2ம் பிரதிவாதி 07.04.2021 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பாளராக்கப்பட்டுள்ளார் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்.

4. மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு எதிராக 07.04.2021 அன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. இருதரப்பு கருத்துக்களும், வழக்காவணங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6. இந்த மனுவின் அசல் வழக்கானது மனுதாரர்/ 2ம் பிரதிவாதி மற்றும் இதர பிரதிவாதிகளுக்கெதிராக எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 07.04.2021 அன்று எதிர்வழக்குரை தாக்கல்

செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், கொரானா காலகட்டம் என்பதால் இந்த மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யக் கூற இயலவில்லை என்றும், இந்த மனுதாரர் சம்மன் பெற்ற பிறகு அவரது வழக்கறிஞரை சந்தித்தபோது தனது தரப்பில் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளதாக கூறியதாகவும், மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில், 07.04.2021 அன்று மனுதாரர்/2ம் பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

7. மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில், 07.04.2021 அன்று அசல் வழக்கானது 2019ல் தாக்கல் செய்யப்பட்டது என்றும், மனுதாரர் கொரானா காலகட்டம் என்பதால் அவரது வழக்கறிஞரை சந்தித்து எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறுவது உண்மையல்ல என்றும், எனவே, மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனு நீண்டகாலம் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

8. விசாரணை நீதிமன்றத்தில், இருதரப்பினருக்கும் வழக்கை சந்திக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது. மனுவை அனுமதிக்காவிட்டால், மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு, ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்படும். இந்த வழக்கில் இன்னும் சாட்சிய விசாரணை முடியவில்லை.

எனினும், இந்த மனு ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிர்மனுதாரர்/ வாதிக்கு நியாயமான செலவுத்தொகை செலுத்த உத்தரவிட்டு, மனுவை அனுமதிப்பதே, நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

9. **முடிவாக,**

இந்த மனுவின் செலவுத்தொகையாக, மனுதாரர்/2ம் பிரதிவாதி **ரூ.1500/-**(ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்), எதிர்மனுதாரர்/வாதி தரப்புக்கு 09.10.2025 க்குள் செலுத்தும்பட்சத்தில், இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இந்த மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க வாய்தா **09.10.2025.**

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.09.26 13:56:30 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை.

B.SARAVANAN Digitally signed by B.SARAVANAN Date: 2025.09.26 13:56:35 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**